கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

அ.வ.எண். **223/2022**

நாள் : 19.10.2024
வா.சா.1 : முத்துகிருஷ்ணன்

பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை

நான் HDFC நிறுவனத்தில் கலெக்சன் ஏஜெண்டாக பணிபுரிகிறேன். நான் 40 வருடமாக விருதுநகரில் குடியிருக்கிறேன். வாதி பாண்டியனை 5 வருடமாக தெரியும். பிரதிவாதி மகேஸ்வரியை பணம் கொடுத்தபோது ஒருமுறைதான் பார்த்துள்ளேன். பாண்டியன் என்னை சாட்சி கையொப்பம் செய்ய அழைத்து சென்றாரா என்றால், பணம் கொடுத்த அன்று சாட்சி கையொப்பம் செய்ய பைக்கில் அழைத்து சென்றார். என்னை அகமதுநகருக்கு அழைத்து சென்றார். அந்த வீட்டு எண் ஞாபகம் இல்லை. எவ்வளவு பணம் கொடுத்தார் என்று தெரியாது. பணம் கொடுத்ததை பார்த்தேன். நான் செல்வதற்கு முன்னால் புரோநோட் எழுதிவைத்திருந்தார் என்றால், சரியல்ல. பணம் கொடுக்கும்போது மகேஸ்வரியின் கணவர், தனசேகர் மற்றும் பாய் என்று அழைக்கப்படும் ஒரு நபரும் இருந்தார். நான் செல்லும்போது மகேஸ்வரியும், காளிமுத்துவும், தனசேகரும், பாயும் இருந்தார்கள். பணம் கொடுத்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை. புரோநோட்டில் மகேஸ்வரி மேலே ஒரு கையொப்பமும், கீழே ஒரு கையொப்பமும் செய்தார். இரண்டாவதாக தனசேகர் கையொப்பம் செய்தார், அதன் பின்பு 2 வது சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். வாதியை எனக்கு தொழில்ரீதியாக பழக்கம். நானும் ரியல்எஸ்டேட் தொழில் செய்கிறேன் என்றால், சரிதான். ரியல்எஸ்டேட் முழுநேரமாக செய்யவில்லை. மகேஸ்வரியின் கணவரை பணம் கொடுத்தபோது பார்த்தேன். இரண்டுமுறை பார்த்தேன். இன்னொருமுறை ஓட்டலில் சாப்பிடும்போது பார்த்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னால் பிரதிவாதியயோ, அவரது கணவரையோ நான் பார்க்கவில்லை என்றால், சரியல்ல. நான் சாட்சி கையொப்பம் செய்த புரோநோட்தான் வா.சா.ஆ.1.

அதில் மகேஸ்வரியின் கையொப்பம் தவிர மற்ற எழுத்துகள் அனைத்தும் ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். புரோநோட் எழுதும்போது மகேஸ்வரி கையொப்பம் செய்யவில்லை என்றும், நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால், சரியல்ல. என் முன்னிலையில் வாதி பிரதிவாதிக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும், நான் வாதிக்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால், சரியல்ல.

மறுவிசாரணை இல்லை